

# அராலித்துறைச் சாதனைக்குப் பின்னால்...

கடந்த ஆவணி மாதம் 8ம் திகதி அராலித்துறையில் இடம்பெற்ற ஒரு கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கி, வடபிராந்தியப் படைத்துறைத் தலைமைத் தளபதிகளான மேஜர். ஜெனரல் கொப்பேக்கடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகளும் ஒரு இராணுவச் சிப்பாயும் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இக்கண்ணிவெடித் தாக்குதலுக்கு உடனடியாகவே நாம் உரிமை கோரியிருந்தோம். ஆனால், அகற்றப்படாதிருந்த 'பழைய கண்ணிவெடி' ஒன்றில் சிக்கியே தமது தளபதிகள் உயிரிழந்தனர் என, சிறீலங்கா அரசு கூறியது. அதாவது, தீவகம் சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட முன்னர் புலிகளினால் அது



வீரவேங்கை
எல்லாளன் - நிசாந்தன்
(பொன்னுத்துரை தங்கத்துரை)
வேலணை மேற்கு



வீரவேங்கை புனிதன்
(நமசிவாயம் சிறிதரன்)
புங்குடுதீவு

புதைக்கப்பட்டிருந்தது என்றே, சிங்களப் படைகள் விளக்கமளிக்கின்றன.

ஆனால், சிங்கள அரசு கூறுவதுபோல அது பழைய கண்ணிவெடி அல்ல.

தீவகத்திலிருந்து யாழ்ப்பாணம் மீதான படையெடுப்புக்குரிய முன்னேற்பாடுகளைச் சிங்கள இராணுவம் செய்யத்தொடங்கிய அண்மைக்காலத்திலேயே, இக்கண்ணியைப் புதைத்தோம்.


தீவகத்தைச்சூழ, சிங்களப் படை அமைத்து வைத்திருந்த பாதுகாப்பு வியூகங்களை ஊடுருவி உள்நுழைந்த எமது சிறப்பு வேவுப்பிரிவினர், இந்த வீரசாதனையைப் புரிந்தனர்.

இந்த உண்மையைச் சிங்களப் படைகளும் சிங்கள அரசும் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தும், அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றன.

தமது பாதுகாப்பு அரண்களை ஊடுருவி, இந்த இராணுவ சாதனையைப் புலிகள் செய்துள்ளார்கள் என்று வெளிப்படையாகக் கூற, வெட்கப்படுகின்றார்கள்.

ஆனாலும் இக்கண்ணியானது ஒரே தடவையில் அல்லது ஒரே நாளில் சுலபமாக புதைக்கப்பட்டதல்ல. பல இடர்கள் -உயிரிழப்புக்கள் மத்தியில், பல நாட்கள், பல வேவு வீரர்களினால் பல இடங்கள் பரிசோதிக்கப்பட்டபின், பொருத்தமன ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்கண்ணி புதைக்கப்பட்டது.

இக்கண்ணி புதைக்கப்படவெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், வெறும் வெளியுமல்ல; தினமும் படையினர் பயணம் செய்யும் பாதையுமல்ல.



வீரவேங்கை - தமிழன்
(சிவராஜா புவனேந்திரன்)
வேலணை

ஏனெனில், இது சாதாரண சிப்பாய்களுக்காக வைக்கப்பட்ட கண்ணியல்ல.

படையெடுப்பை முன்னின்று வழிநடாத்த இருக்கும் முக்கிய உயர் அதிகாரிகளை இலக்காகக் கொண்டு, வைக்கப்பட்ட கண்ணியாகும்.



2-வது லெப்.
செம்பியன், சுபாஸ்
(பிரான்சிஸ் றொபின்சன்)
புங்குடுதீவு

இவ்விதம் ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து கண்ணியைப் புதைக்கமுன்னர், இதற்கான பணியில் ஈடுபட்ட ஐந்து போராளிகளை நாம் இழந்துள்ளோம். இவர்கள் வெவ்வேறு சம்பவங்களில், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு நாட்களில் வீரச்சாவை அணைத்தனர்.

எல்லாளன், புனிதன் ஆகிய போராளிகள் 22-4-92 அன்று வேலணையிலும், தமிழன் என்ற போராளி 29-05-92 அன்று அராலி வெளியிலும், 2-வது லெப். செம்பியன், 2-வது லெப். அறிவழகன் ஆகிய போராளிகள் 15-06-92 அன்று ஊர்காவற்றுறையிலும் வீரச்சாவடைந்தனர்.

துணிகரமான இந்த இரகசியப் பணியின்போது எதிரியின் கண்ணிகளில் பட்டு துப்பாக்கிக் குண்டேந்தியும், சயனைட் அருந்தியும் எதிரியின் வலயத்துக்குள்ளேயே இவர்கள் வீரச்சாவடைந்தனர்; இவர்களது உடல்கள்கூட எதிரியிடமே சிக்கின.

இத்துணிகர - வீரசாதனையைப் புரிந்த சிறப்பு வேவுப்பிரிவின் போராளிகளுக்கு, தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்ததுடன் எமது மக்களுக்கு அவர்களின் பெயர் விபரங்களைத் தெரியப் படுத்தினார்.

இவ்விதம் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய இடம்பெற்றுவிட்ட அராலித்துறைக் கண்ணிவெடியின் பின்னால் உயர்ந்த தியாகமும், மிகப் பெரிய வீரமும், துணிவும் அடங்கியுள்ளன. ■



2-வது லெப். அறிவழகன்
(ஜோசப் வின்சன்ட்)
இலந்தமோட்டை, மன்னார்

# கண்ணீர் விட்டே

இளங்கோ சந்தேகப்பட்ட மாதிரி அது இராணுவத்தினர் தான். ஏற்கனவே, பிரச்சினை வந்தால் எந்தப் பாதையால் ஓடவேண்டும் என்று கஜேந்திரனுக்கு கூறியிருந்தார். அவ்வழியே ஓடினான் கஜேந்திரன். களைத்துப் போன நிலையில் சயனைட்டைக் கடித்தான். (முழுமையாக விழுங்கவில்லை) அந்நிலையிலும் தப்பமுடியும் போல இருந்தது. முகாமுக்கு ஓடிவந்து விட்டான், முதலுதவியின்பின் காப்பாற்றப்பட்டு விட்டான்.
இளங்கோ காயமடைந்த நிலையில் உபஇயந்திரத் துப்பாக்கியை பாகம் பாகமாய்க் கழற்றி ஆற்றுக்குள் வீசினார் (வெருகல் ஆறு முதலைகள் நிறைந்தது). சட்டைப்பையில் இருந்த பணத்தை இராணுவத்தினர் பயன்படுத்த முடியாதவாறு கிழித்தெறிந்தார். (இளங்கோ கிளித்தெறிந்த நோட்டுக்கள் சில இன்னும் மூதூரில் உள்ளன). சயனைட்டை உட்கொண்டார்.

சயனைற் உட்கொண்ட - நிலையில் இளங்கோ என்ன நினைத்திருப்பாரோ?

அப்போது 19 வயதே உள்ள தன்மனைவியையா? தனது மூன்று குழந்தைகளினதும் எதிர்காலத்தையா? முதன் முதல் மட்டக்களப்புக்கு றைபிள் வரும் போது அதை ஏந்திப் போரிடும் சந்தர்ப்பம் கிடைக்காமல் சாகிறேன் என்றா?

மூன்றாவதுதான் சரியென நான் திடமாக நினைக்கிறேன் -இளங்கோவைப் பற்றிச் சரியாக அறிந்தவன் என்றவகையில். இளங்கோவைப் பற்றி நினைக்கும் போது விபரிக்கமுடியாத ஏதோவொரு உணர்ச்சி ஏற்படுகிறது. "கொஞ்ச நாளைக்கு அவரைத் தூர இடம் ஒண்டுக்கும் அனுப்பாதேங்கோ எண்டு சொன்னதைக் கேட்டீங்களோ" என்று ஜெயந்தி உரத்துச் சொல்வது போன்ற ஒரு உணர்வு ஏற்படும்.

* * * *

இளங்கோவின் மரணம் பற்றிய செய்தி யாழ்ப்பாணத்திலிருந்து தான் மட்டக்களப்புக்குக் கிடைத்தது. அப்படியானால் காந்தன் எங்கே? ஏன் வராமல் நிற்கிறான்? துடித்துக் கொண்டிருந்தேன் நான். சில நாட்களின் பின் காந்தன் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். சம்பவம் நடந்த உடனே எங்களிடம் வராததற்காக அவனைக் கோபித்துக் கொண்டேன். "எப்பிடிக் காக்கா வரமுடியும்? சுடுமணலுக்க நடந்து காலெல்லாம் ஒரே கொப்புளம்!" என்றான் அவன். பின்னர் காந்தனிடம் போன போதுதான் இருகால்களையும் கவனித்தேன்-சுதந்திரத்துக்காக நாங்கள் கொடுக்கும் விலைதான் அந்தக் கொப்புளங்கள் என்று.

* * * *

இளங்கோவை இழந்ததற்காக பதிலடி கொடுக்க வேண்டுமென்றான் காந்தன். இளங்கோவை நாம் இழப்பதற்கு காரணமான வாகரை முகாம் இராணுவத்தினர் மீதே எமது முதல் தாக்குதல் (17-08-85 அன்று) நடைபெற்றது. எமக்கு ஒரு T. 56 ரக றைபிள் கிடைத்தது. மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பின்னாளில் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்த குமரப்பா இத்தாக்குதலுக்கு தலைமை தாங்கினார். ஏதோ ஒரு திருப்தி எமக்கு.

* * * *

வளர்ந்து கொண்டே போனது எங்கள் தேசிய விடுதலைப் போராட்டம். மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி நிமால் டி சில்வா உட்பட ஏராளமான படையினரை இழந்தது சிறீலங்காப் படை. அவ்வாறே இந்தியப் படையும் மட்டக்களப்பில் கசப்பான பாடங்களைப் படித்தது.

தமிழ்த் தேசிய இராணுவத்தின் மீதான தாக்குதலின் முடிவில் கைப்பற்றப்பட்ட 50க்கு மேற்பட்ட கால்காஸ்ட்ரோ, 200க்கு மேற்பட்ட LMG., 2000க்கு மேற்பட்ட றைபிள்கள், ஏராளமான மோட்டார்கள் போன்ற ஆயுதங்களை ஏற்றுவதற்கு உழவு இயந்திரங்களும், பாரவண்டிகளும் (லொறி) தான் தேவைப்பட்டன என்ற செய்தியை அறிந்தபோது பரமதேவாவையும், ரவியையும் இழந்து ஒரேயொரு றைபிளை மட்டும் பெற்றுக்கொண்டது நினைவுக்கு வந்தது.
தொடர்ந்து சிறீலங்காப் படையினருடனான போர் தொடங்கிய போது (1990 யூன்) வாழைச்சேனை முதல் பொத்துவில் வரையிலான சகல காவல் நிலையங்களும் ஒரே இரவில் கைப்பற்றப்பட்ட செய்தி கிடைத்தது. அப்போது நாம் தென்தமிழீழத்தில் நடத்திய முதலாவது காவல்நிலையத் தாக்குதல் தான் நினைவுக்கு வந்தது. ஒரு காவல் நிலையத்தைக் கைப்பற்றவே ஆயுதங்களும் போராளிகளும் போதாமலிருந்த நாம் இன்று ஆயுதங்களின் தொகையில், ஆட்பலத்தில் பல்லாயிரமாக பெருகி நிற்பதை எண்ணி மகிழ்கிறேன்.
எமது போராட்டத்தின் வளர்ச்சி சிறீலங்காப் படையினர் மூலமாகவும் தெரிகிறது. அன்று (13-10-86) அடம்பனில் எம்மால் கைது செய்யப்பட்டு கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் சிறீலங்காவிடம் ஒப்படைக்கப்பட்ட (19-12-86) பாணந்துறையைச் சேர்ந்த அஜித் சந்திரசிறி இன்று (2-08-91) வட முனையில் எமது தாக்குதலின் போது உயிரிழந்துள்ளான். (இத் தாக்குதலில் மொத்தம் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 20 றைபிள்கள் கைப்பற்றப்பட்டன.) இவனை மேஜராகக் கௌரவித்துள்ளது சிறீலங்கா அரசு. இத்தாக்குதலில் எமது தரப்பில் எந்தவிதமான இழப்பும் இருக்கவில்லை. இது எமது வளர்ச்சியின் இன்னொரு எடுத்துக் காட்டு.
1990ம் ஆண்டு கொக்கட்டிச் சோலையில் குமரப்பா, புலேந்திரன் முதலான பன்னிரு வேங்கைகளுக்கான அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அதில் நானும் கலந்து கொண்டேன். அன்று சிறுவர்களாக இருந்த பலர் அங்கு றைபிள்களைக் கட்டிக் கொண்டு போராளிகளாக நின்றனர். அந்தக் கூட்டத்தில் நியூட்டனும் பேசினார். "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் கைப்பற்றிய ஆயுதங்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பு -அம்பாறைப் பிரதேசத்திலிருந்தே பெறப்பட்டன. இன்று யாழ்ப்பாணம் கோட்டை எம்மால் விடுவிக்கப்பட்டிருக்கின்றதென்றால் மட்டக்களப்புப் போராளிகளும்தான் அதில் பங்காளிகள். மட்டக்களப்புப் போராளிகளும் அங்கு வீரச்சாவு அடைந்துள்ளார்கள். அதைவிட யாழ்ப்பாணக் கோட்டையை விடுவிப்பதற்கு பயன்படுத்திய ஆயுதங்களில் கணிசமானவை எம்மால் கைப்பற்றப்பட்டவையே."

நான் அந்த இரு கைத்துப்பாக்கிகளையும் நினைத்துக் கொண்டேன். கூடவே இளங்கோவின் குழந்தைகளையும் காந்தனின்